## 1. தங்களது நியமனத்தில் சட்டமுறையான தன்மை

❖ சமாதான நீதவான் நியமனங்கள் இருவகைப்படுகின்றன.

(i) கௌரவ நியமனங்கள் (சிறந்த சமூக சேவையை ஆற்றிய ஆட்களுக்கு மற்றும் சமுதாயத்தின் சிறப்புப் பிரசைகளுக்கு)

(ii) உத்தியோகபூர்வ நியமனங்கள் (கடமை அவசியத்தின்மேல் தேவையான சட்டமுறையான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு வழங்கப்படுகின்ற நியமனங்கள்) இந்நியமனங்கள் பதவி வகிக்கும் காலத்துக்காக மாத்திரமே செல்லுபடியாகும். நீதித் துறைச் சட்டத்தின் 45(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறு உரித்துப்பெறுகின்ற பதவிப்பெயர்கள் அச் சட்டத்தின் 5 ஆம் அட்டவணையில் உள்ளடங்கியுள்ளன.

(*பின்னிணைப்பு* 1)

## 2. சத்தியப் பிரமாணம் செய்தல்

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற தங்களது நியமனம் **சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே** செல்லுபடியாகிறது.

- நீதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதம், அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றுடன் சம்பந்தப்பட்ட (நியமனக் கடிதத்தின்மேல் இடது மூலையில் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் குறிப்பிடப்பட்டுள்ளது.) நீதிமன்றத்திற்குச் சென்று பதிவாளரை சந்திக்க வேண்டும். அப்போது சத்தியப் பிரமாணம் செய்வதற்காகத் தேவையான ஆவணங்கள் மற்றும் திகதியொன்றை தாங்கள் பெற்றுக் கொள்ளலாம். (இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.)
- தங்களது நியமனத்திற்கான வர்த்தமானப் பத்திரிகையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக தொலைபேசி இலக்கம் 011 -2437509-14 தொடுகை 410 இன் மூலம் சமாதான நீதவான் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். அதற்காக நீதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதத்தின் எட்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம் அவசியமாகிறது. தங்களது நியமனம்

தங்களது கையில் கிடைக்கும்போது நியமனத்திற்கான வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டிருக்கும் என்பதால் அது பற்றி மேற்குறித்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- தங்களது நியமனம் சம்பந்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை வெள்ளிக்கிழமை தினகரன் பத்திரிகையுடன் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், பின்வரும் முகவரியிலிருந்தும் இணையதளத்தின் மூலமும் அரசாங்க அச்சகத்திலிருந்தும் தேவையான வர்த்தமானத் திகதி பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வர்த்தமானப் பத்திரிகையை கொள்வனவு செய்வதற்காக

அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம் ,
163,பொல்ஹேன்கொடை வீதி,
கொழும்பு 05.

## வர்த்தமானப் பத்திரிகையை இணையத்தில் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் இணையத்தளத்தை நாடவேண்டும்:- www.documents.gov.lk

மு.கு.- நீதி அமைச்சின் செயலாளருக்காக கையொப்பமிடப்பட்ட நியமனக் கடிதத்தில் மற்றும் சம்பந்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள தங்களது பெயர், முகவரி, நீதிமன்ற வலயம் என்பவற்றில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படவேண்டியிருப்பின் சரிப்படுத்தப்பட வேண்டிய விதத்தைத் தெளிவாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்று மற்றும் நீதி அமைச்சின் செயலாளருக்காக கையொப்பமிட்ட கடிதத்தின் மூலப்பிரதி பதிவுத் தபாலில் தாமதமின்றி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

செயலாளர்,
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,
நீதிமன்ற மாவத்தை,
கொழும்பு 12.



**சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டதன் பின்னர் தங்களது சமாதான நீதவான் பதவி செல்லுபடியாகிறது. பின்னர் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும் :-**

- ➢ தாங்கள் சமாதான நீதவான் ஒருவராக கடமையாற்றும் இடத்தில் தங்களது முழுப்பெயர் முகவரி, மற்றும் பதிவு இலக்கத்துடனான அறிவித்தலொன்றை காட்சிக்கு வைக்கவும்.
- ➢ தாங்கள் சமாதான நீதவான் ஒருவராக நீதி அமைச்சிலிருந்து நியமனம் பெறுகின்றீர்கள் என்பதுடன், சமாதான நீதவான் சங்கங்களின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வது சமாதான நீதவானாக தங்களது கடமைகளுக்காக அத்தியாவசியமான தல்ல. இத்தகைய சங்கங்களின் செயற்பாட்டைப்பற்றி நீதி அமைச்சு பொறுப்பேற்காது.
- ➢ சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் தங்களது கடமைகளை ஆரம்பிக்கலாம்.
- ➢ சமாதான நீதவான் இறந்து விட்டால் அது தொடர்பாக நீதி அமைச்சுக்கு அறியத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## 3. உத்தியோகபூர்வ இலச்சினையை தயார் செய்யும் போது

*01.* **உத்தியோகபூர்வ இலச்சினையை தயார் செய்யும் போது அதில் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் : (அட்டவணை III)**

1. நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பெயர்
2. நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி
3. நியமனக் கடிதத்தில் 8ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம்

2. அரசாங்கச் சின்னம் ஒருபோதும் தமது உத்தியோகபூர்வ இலச்சினையில் அல்லது கடிதத் தலைப்புகளில் உள்ளடக்குதலாகாது.
3. சமாதான நீதவான் உத்தியோகபூர்வ இலச்சினையில் சமாதான நீதவான் பதிவு இலக்கத்தைத் தவிர வேறு பதிவு இலக்கங்கள் இடுதலாகாது.
4. இதுவரை பதிவு இலக்கமொன்று பெறப்படாதிருப்பின் நியமனக் கடிதத்தினதும் சத்தியப் பிரமாண அல்லது உறுதியுரையின் பிரதிகளை இவ்வமைச்சுக்கு சமர்ப்பித்த பின்னர் பதிவு இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். (2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் பெற்ற சமாதான நீதவான்களுக்காக இது செல்லுபடியாகாது.

5. முகவரி மாறுபட்டிருப்பின் பிரதேச செயலாளரால் மேலொப்ப மிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழுடன் அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

**உத்தியோகபூர்வ இலச்சினையை உபயோகிக்கும்போது :-**

- தமது கடமை சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்காக மாத்திரமே உத்தியோக பூர்வ இலச்சினையை உபயோகிக்க வேண்டும்.
- தனிப்பட்ட கடிதங்களுக்காக உத்தியோகபூர்வ இலச்சினை உபயோகித்தலாகாது.
- நீதி அமைச்சுக்கு அனுப்பும் எல்லாக் கடிதங்களிலும் தங்களது உத்தியோக பூர்வ இலச்சினை **கட்டாயமாக** உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

## 4. சமாதான நீதவான் அடையாள அட்டை

தங்களது சமாதான நீதவான் நியமனத்துடன் இணைக்கப்பட்டுள்ள (அட்டவணை 1) சமாதான நீதவான் அடையாள அட்டையை வழங்கும் படிவத்தை நன்கு வாசித்துப் பார்த்து தெளிவான கையெழுத்தில் சரியாகப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

- தங்களது சமாதான நீதவான் அடையாள அட்டை காணாமற் போயிருப்பின் புதிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்து நீதி அமைச்சிடம் கோரிக்கையொன்று செய்யப்படுதல் வேண்டும்.

1. சமாதான நீதவான் நியமனக் கடிதத்தின் பிரதியொன்று
2. சத்தியப் பிரமாணத்தின் /உறுதியுரையின் பிரதியொன்று
3. பொலிஸ் முறைப்பாட்டின் பிரதியொன்று
4. 40x40 மி.மீ. வர்ணப் புகைப்படங்கள் இரண்டு
5. தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று
6. ரூபா 200 பின்வரும் கணக்கு இலக்கத்திற்குச் செலுத்தி அதன் ரசீதின் பிரதியொன்று (நீதி அமைச்சின் கணக்குப் பிரிவுக்கும் இச்செலுத்துதலைச் செய்யலாம்.)

**கணக்கு இல : - 176-1-001-9-9025184**



- தங்களது சமாதான நீதவான் அடையாள அட்டை பழுதடைந்திருப் பின் அல்லது மீண்டும் வழங்கப்பட வேண்டியிருப்பின்,

1. சமாதான நீதவான் நியமனக் கடிதத்தின் பிரதியொன்று .
2. பழுதடைந்த அடையாள அட்டை
3. 40x40 மி.மீ. வர்ணப் புகைப்படங்கள் இரண்டு.
4. ரூபா 200 பின்வரும் கணக்கு இலக்கத்திற்குச் செலுத்தி அதன் ரசீதின் பிரதியொன்று (நீதி அமைச்சின் கணக்குப் பிரிவுக்கும் இக்கொடுப்பனவைச் செலுத்தலாம்.)

*மு.கு.- 1. தங்களது வதிவிடம் மாறியிருப்பின் பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழின் மூலம் புதிய முகவரியை உறுதிப்படுத்தி எம்மிடம் அனுப்பி வைக்கவும்.*

2. சமாதான நீதவான் பிரிவினால் வழங்கப்படுகின்ற சமாதான நீதவான் அடையாள அட்டையில் எவ்வித மாற்றமும் செய்யப் படுதலாகாது என்பதுடன் அது தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாகும்.

## 5. சமாதான நீதவான் ஒருவரின் பொறுப்புக்கள்

- **நீதிமன்ற நியாயாதிக்கத்தைப் பற்றி கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.**

தங்களது நியமனம் தீவு முழுவதுக்குமாயின், தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரியலாம். தங்களது நியமனம் ஏதேனும் ஒரு நீதி நிருவாக வலயத்துக்காக/ மாவட்டத்திற்காக வழங்கப் பட்டிருப்பின், சம்பந்தப்பட்ட நீதி நிருவாக வலயத்தினுள்/ மாவட் டத்தினுள் மாத்திரமே கடமை புரியவேண்டும்.

- அரசாங்க இலச்சினையை உபயோகிக்காதிருத்தல்

எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்க சின்னத்தை தமது அலுவலக இலச்சினையில் அல்லது கடிதத் தலைப்புக்களில் அல்லது வேறொரு ஆவணத்தில் உள்ளடக்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

❖ **ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தும்போது ஆட்கள் சமர்ப்பிக்கும் தகவல்களைப் பற்றி கவனம் செலுத்த வேண்டும்.**

நானாவித ஆட்களின் ஆவணங்ளை அத்தாட்சிப்படுத்தும் போது அவர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் பொய்யான வையென உணரும்போது அவ்வாவணங்களை அத்தாட்சிப்படுத்து வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுடன், எச்சந்தர்ப் பத்திலும் சம்பந்தப்பட்ட ஆளின் முன்னிலையிலேயே அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

❖ **கட்டணங்ளை அறவிடுதல்**

தாங்கள் மதிப்புக்குரிய பதவியொன்றை வகிக்கின்றதனால் தமது சேவைக்காக எவ்வித பணத்தையோ அல்லது வேறு ஏதேனு மொரு நன்மையையோ பெற்றுக்கொள்வது முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.

❖ **அலுவலக இலச்சினையை உபயோகித்தல்**

தங்களது எல்லாக் கடமைகளின்போதும் அலுவலக இலச்சினையை உபயோகிக்க வேண்டுமென்பதுடன், பெயர், முகவரி மற்றும் சமாதான நீதவான் பதிவு இலக்கத்தை சரியாகவும் கட்டாயமாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.

❖ **உறவினர்களின் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தல் சம்பந்தமாக**

நெருங்கிய உறவினர்களின் ஆவணங்களை சமாதான நீதவான் அத்தாட்சிப்படுத்தல் செய்தல் முடியாது.

## 6. தனிப்பட்ட நடத்தை

01. I. தனிப்பட்ட முறையில் அனைவருக்கும் முன்மாதிரியாக தாங்கள் இருக்க வேண்டும். எப்போதும் தனது பதவியின் கௌரவத்தைப் பேணும் வகையில் செயல்படுதல் வேண்டும். சேவையை நாடி வருகை தருபவர்களுடன் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளல் வேண்டும்.

II. குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் தண்டனை பெறுவது என்பன சமாதான நீதவான் பதவியை இரத்துச்செய்வதற்குக் காரணமாகின்றன. அதே போல் அரசியல், இனவர்க்க, சாதி, சமய வேறுபாடின்றி அனைவரையும் ஒரே விதத்தில் கவனிக்க வேண்டும்.

(காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட 1895 ஆம் ஆண்டின் சத்தியம் மற்றும் உறுதியுரைக் கட்டளைச்சட்டம், 1953 சத்தியக் கூற்றுச் சட்டம், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை என்பவற்றுக்கு தங்களது கவனம் கோரப்படுகின்றது.)



02. பிரச்சினைக்குரிய சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட எல்லாத் திறத்தவர்களினதும் நம்பிக்கைக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

03. சமுதாய விரோத செயல்களைத் தடுப்பதற்காகவும் குறைத்துக் கொள்வதற்காகவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும்.

04. சட்டத்தை அமுல்படுத்தும் பொலிசு மற்றும் நீதிமன்றங்கள் போன்ற நிறுவனங்களின் தொழிற்பாட்டை இலகுபடுத்து பவராக இருக்க வேண்டும்.

05. தனது சமாதான நீதவான் பதவி நீதி நிருவாக வலயமொன்றுக்கு கிடைத்திருப்பின், நீதி நிருவாக வலயத்திற்கு வெளியே சென்று ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவல்கள் செய்ய முடியாது. ஆயினும் தீவிலுள்ள எந்தவோர் ஆளுக்கும் நீதி நிருவாக வலயத்துக்குள் வருகைதந்து அத்தாட்சிப்படுத்திக் கொள்ள முடியும்.

06. தன்னால் கையொப்பமிடப்படுகின்ற எல்லா ஆவணங்கள் தொடர்பாகவும் குறிப்பு வைத்துக்கொண்ட இடாப்பொன்று தங்களால் பேணப்பட வேண்டுமென்பதுடன், சத்தியக் கூற்று ஒன்றின் மாதிரியொன்று தங்களது வசதிக்காகவும் தகவலுக்காகவும் இதில் அட்டணைப்படுத்தப்பட்டுள்ளது.

சமாதான நீதவான் ஒருவராக தங்களுக்கு எழுகின்ற சிக்கல் களின்போது ,

செயலாளர் ,<br>
நீதி அமைச்சு,<br>
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>
கொழும்பு 12,

என்னும் முகவரியுடனும்,

☎ 011- 2437507 முதல் 12 வரை ,தொடுகை: சமாதான நீதவான் பிரிவு 410 ஆம் இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

**இலங்கையினுள் சட்டம், சமாதானம் மற்றும் சமுதாய நலன்புரியை கட்டியெழுப்புவதில் தங்களின் சேவையை நாங்கள் மிகவும் வரவேற்கின்றோம்.**

[redacted]

## 7. அட்டவணைகள்

**அட்டவணை I**

சமாதான நீதவான் பிரிவு, எனது இல: 20/1/அடையாளஅட்டை
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.
20.... ஆம் திகதி.

ஐயா/அம்மணி,

**சமாதான நீதவான் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் விண்ணப்பம்**

தனது நியமனத்தில் சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க வேண்டும். (சமாதான நீதவான் நியமனம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு 06 மாத காலத்துக்குள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வது கட்டாயமானது.)

02. தங்களது சமாதான நீதவான் நியமனத்திற்கான அடையாள அட்டையை வழங்குவதற்காக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் மேற் குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இவ்வமைச்சுக்கு வருகை தந்து கையளிக்கலாம் எனத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

01. அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதத்தின் நிழற்படப் பிரதியொன்று. (மாண்புமிகு அமைச் சரின் கையொப்பத்துடனான மேவுகை கடிதம் அல்ல)

02. 06 மாத காலத்துக்குள் பெறப்பட்ட 40X40 மி.மீ அளவிலான 02 வர்ணப் புகைப்படங்கள் (இப்புகைப் படங்களின் மறுபக் கத்தில் தங்களது பெயர் மற்றும் நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தங்களது சமாதான நீதவான் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.)

03. மக்கள் வங்கி, நகர மத்திய கிளை, கொழும்பு 10, 176-1-001-9 -9025184 ஆம் இலக்க 'நீதி அமைச்சின் செயலாளர்' பெயரில் உள்ள கணக்கில் 200 ரூபாவை வரவு வைத்து அதன் பற்றுச்சீட்டை இத்துடன் இணைக்க வேண்டும். (மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.) காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).



- இச் செலுத்துதல்களை இவ்வமைச்சின் கணக்குப் பிரிவிலும் செலுத்தலாம்.

04. சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் சம்பந்தப்பட்ட நீதிமன் றத்தால் வழங்கப்படுகின்ற உறுதியுரையின் பிரதியொன்று .

05. தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்று .

மு.கு .

- மேற்கூறியவை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'சமாதான நீதவான் அடையாள அட்டைகள்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- மேற்குறித்த அவசியமான ஆவணங்கள் உள்ளடங்காத மற்றும் உரிய முறையில் தெளிவாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்ளைப் பற்றி நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படலாம்.
- முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தயோகத்தரின் சான்றிதழைச் சமர்ப்பிக்கவும்.

இப்படிக்கு, விசுவாசமுள்ள,

.........................................................

நீதி அமைச்சின் செயலாளருக்காக

(இங்கே வெட்டவும்)

.............................................................................................................

**சமாதான நீதவான் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் :- ..............................................
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..............................................
3. முகவரி :-..............................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..............................................
5. சமாதான நீதவான் பதிவு இலக்கம் :- .............................................. (நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியின்படி)

திகதி : ............... ..........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

அட்டவணை II

## சத்தியக்கூற்று ஒன்றின் மாதிரி
## சத்தியக்கூற்று

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், பிலியந்தலை, மொரட்டுவ வீதி, 142/6 ஆம் இலக்க முகவரியைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி ஆகிய நான், இந்து மதத்தைச் சேர்ந்தவராக நேர்மையாகவும், உண்மையாகவும், பய பக்தியுடனும் உறுதியுரை அளித்து பின்வருமாறு வெளிப்படுத்துகிறேன் :-

1. இச்சத்தியக்கூற்றில்/உறுதியுரையில் பெயர் குறிப்பிட்டுள்ள சத்தியம் /உறுதியுரை அளிப்பவர் நானாவேன்.
2. எனது தேசிய அடையாள அட்டையின் இலக்கம் 372667550 v ஆகும்.
3. எனது மகனாகிய கந்தசாமி செல்வநாயகம் என்பவரால் எனது பெயரில் அற்றோனித் தத்துவப்பத்திரமொன்று 2005, யூலை மாதம் 23 ஆந் திகதி பிலியந்தலையில் வைத்து கைச்சாத்திடப்பட்டதுடன் அந்த தத்துவப் பத்திரத்தின் இலக்கம் 266 ஆகும்.
4. அத்தத்துவப்பத்திரம் 2007, ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. சொல்லப்பட்ட 266 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் இதுவரை செல்லுபடியாக உள்ளதுடன், ஒருபோதும் அது இரத்துச் செய்யப்படவில்லை.

| | |
|---|---|
| (சத்தியம்/உறுதியுரை அளிப்பவர் 50 ரூபா முத்திரையொன்றின் மேல் கையொப்பமிடுவது கட்டாயமாகும் .) | ..........................................<br>உறுதியுரை அளிப்பவர் |
| மேற்கூறிய கூற்றை வாசித்து விளங்கப் படுத்தப்பட்டு அவர் விளங்கிக்கொண்டதாக திருப்தியடைந்து 2007, செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி கொழும்பில் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் . | ..........................................<br>சமாதான நீதவான்<br>(அலுவலக இலச்சினை) |

சத்தியக் கூற்றுக்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடலாம் .



அட்டவணை III

## சரியான உத்தியோகபூர்வ இலச்சினையொன்றின் மாதிரி

தங்களது நியமனக் கடிதத்தின் பெயர் கணபதிப்பிள்ளை ஆறுமுகம் சோமசுந்தரம் எனக் குறிப்பிட்டிருப்பின் ,

கே.ஏ.சோமசுந்தரம் அல்லது கே. ஆறுமுகம் சோமசுந்தரம் என உத்தியோகபூர்வ இலச்சினையில் குறிப்பிடுதல் வேண்டும்.

தங்களது முகவரி – நியமனக் கடிதத்தில் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரி இல 10, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு 06 என்பதாயின், மற்றும் தங்களது பதிவு இலக்கம் – நியமனக் கடிதத்தின் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம் 10/07/மேமா/தீமு/23 என்பதாயின்

| | |
|---|---|
| கே.ஏ.சோமசுந்தரம்,<br>சமாதான நீதவான்,<br>இல. 10, இரண்டாம் குறுக்குத்தெரு,<br>கொழும்பு 06.<br>10/07/மேமா/தீமு/23 | K. A. Somasundaram,<br>Justice of the Peace,<br>No. 10, Second Cross Street, Colombo 06.<br>10/07/WP/WI/23 |

பின்னிணைப்பு I

**பதவி வழியில் நியமிக்கப்படுகின்ற இலங்கையின் சமாதான நீதவான்கள்**

- இலங்கைக் குடியரசின் சனாதிபதி
- பாராளுமன்றத்தின் சபாநாயகர்
- அரசாங்கத்தின் அமைச்சர்கள்
- பிரதம நீதியரசர்
- எதிர்கட்சித் தலைவர்
- உயர்நீதிமன்ற நீதிபதி
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்
- பிரதி சபாநாயகர்
- ஆளும் கட்சியின் பிரதான ஒழுங்கமைப்பாளர்
- பிரதி அமைச்சர்கள்
- பிரதி குழுத் தலைவர்கள்
- பாராளுமன்ற உறுப்பினர்கள்
- சட்டமா அதிபர்
- அமைச்சரவையின் செயலாளர்
- சனாதிபதியின் செயலாளர்
- பிரதமரின் செயலாளர்
- பாராளுமன்றப் பொதுச்செயலாளர்
- அமைச்சுக்களின் செயலாளர்கள்
- மேல்நீதிமன்ற நீதிபதிகள்
- பொலிஸ்மா அதிபர்
- பிரதிசொலிஸிட்டர் ஜெனரல்
- அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள்
- சட்ட வரைஞர்
- இலஞ்ச ஆணையாளர்



- மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல்
- மேலதிக சட்ட வரைஞர்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்
- பதிவாளர் தலைமையதிபதி
- துணை சொலிஸிட்டர் ஜெனரல்கள்
- அமைச்சுக்களின் சிரேட்ட உதவிச் செயலாளர்கள்
- பாராளுமன்றத்தின் பிரதிப்பொதுச் செயலாளர்
- உயர்நீதிமன்றப் பதிவாளர்
- மேன் முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர்
- பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள்
- சிரேட்ட அரசாங்க சொலிஸிட்டர் ஜெனரல்கள்
- அரசாங்க சட்டத்தரணிகள் மற்றும் அமைச்சுக்களின் உதவிச் செயலாளர்கள்
- உயர்நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்
- மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்
- பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பயிலுநர் உதவிப்பொலிஸ் அத்தியட் சகர்கள் அல்லாத உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள்
- மேல் நீதிமன்றப் பதிவாளர்
- பாராளுமன்றச் சபாநாயகரின் செயலாளர்
- பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் செயலாளர்
- தொழில் நியாய சபைகளின் செயலாளர்

## பதவி வழியில் இலங்கையின் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்கள்

- மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதிகள்
- ஒவ்வொரு குடும்ப நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்
- நீதிவான்கள்
- ஒவ்வொரு ஆரம்ப நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்
- ஒவ்வொரு தொழில் நியாய சபையினதும் தலைவர்கள் ஆகியோர் தமது நீதிமன்ற நியாயாதிக்கத்தை எந்த பிரதேசத்தினுள் அமுல் படுத்துகின்றார்களோ, அப் பிரதேசத்திற்காகவும், மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் செயலாற்றுகின்ற காதிமார்கள் அந்த மாவட்டங் களுக்காகவும் சமாதான நீதவான்களாக செயல்படுகின்றனர்.
- மேலும் மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கங்களில் வதியும் காதிச் சபைகளின் உறுப்பினர்கள் அவர்கள் வதியும் அந்த மாவட்டங் களுக்காகவும்
- மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கங்களில் வதியும் காதிச் சபைகளின் உறுப்பினர்கள் அவர்கள் வதியும் அந்த மாவட்டங்களுக்காகவும்
- ஏதேனுமொரு வலயத்தில் நடாத்தப்படுகின்ற மேல்நீதிமன்றத்தின் மேலதிக பதிவாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின், அந்தந்த வலயம் உள்ளடங்கிய, மாவட்ட நீதிமன்றங்களின், குடும்ப நீதி மன்றங்களின் பதிவாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் உதவிச் செயலாளர்கள் அந்தந்த நீதிமன்றங்களின் அல்லது தொழில் நியாய சபைகளின் நியாயாதிக்கத்திற்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் தாங்கள் சேவை செய்யும் அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் மேலதிக செயலாளர்கள் தாங்கள் சேவை செய்யும் அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் செயலாளர்களின் நிருவாக அலுவலர்கள் அந்தந்த மாவட்டச் செயலாளர்களின் மாவட்டங்களுக்காகவும்,
- பிரதேச செயலாளர்கள் தங்களது அந்தந்த நியாயாதிக்கங்களுக் காகவும்,
- 1991 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நீதித்துறைச் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் மாகாண சபை எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்காகவும், மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் உதவியாளர்கள் தமது நியாயாதிக்கங்களுக்காகவும் பதவிவழியில் சமாதான நீதவான்களாக செயல்படுகின்றனர்.

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் 1(அ) உபபிரிவின்படி நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் பதவி நிலையில் நியமனம் பெறும் சமாதான நீதவான்கள்



## பதவி நிலையில் நியமனம் பெறும் இலங்கையின் சமாதான நீதவான்கள்

- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமையதிபதி
- உள்நாட்டு இறைவரி ஆணையாளர்கள்
- பிரதி பதிவாளர் தலைமையதிபதிகள்
- உதவி பதிவாளர் தலைமையதிபதிகள்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிருவாக அலுவலர்

## பதவி நிலையில் நியமனம் பெறும் இலங்கையின் பகுதிகளுக்கான சமாதான நீதவான்கள்

- காணிப் பதிவாளர்கள்
- மேலதிக மாவட்ட பதிவாளர்கள்
- பிறப்பு இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்கள்
- முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள்

} அவர்களின் நியமனங்கள் ஏற்புடையதாகும் பிரதேசங்களுக்காக

- கிராம உத்தியோகத்தர்கள்

## 1. தங்களது நியமனத்தில் சட்டமுறையான தன்மை

- சமாதான நீதவான் நியமனங்கள் இருவகைப்படுகின்றன.
  - (i) கௌரவ நியமனங்கள் (சிறந்த சமூக சேவையை ஆற்றிய ஆட்களுக்கு மற்றும் சமுதாயத்தின் சிறப்புப் பிரசைகளுக்கு)
  - (ii) உத்தியோகபூர்வ நியமனங்கள் (கடமை அவசியத்தின்மேல் தேவையான சட்டமுறையான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு வழங்கப்படுகின்ற நியமனங்கள்) இந்நியமனங்கள் பதவி வகிக்கும் காலத்துக்காக மாத்திரமே செல்லுபடியாகும். நீதித் துறைச் சட்டத்தின் 45(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறு உரித்துப்பெறுகின்ற பதவிப்பெயர்கள் அச் சட்டத்தின் 5 ஆம் அட்டவணையில் உள்ளடங்கியுள்ளன.

  (*பின்னிணைப்பு* 1)

## 2. சத்தியப் பிரமாணம் செய்தல்

சமாதான நீதவானாக நியமனம் பெற்ற தங்களது நியமனம் **சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே** செல்லுபடியாகிறது.

- நீதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதம், அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றுடன் சம்பந்தப் பட்ட (நியமனக் கடிதத்தின்மேல் இடது மூலையில் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் குறிப்பிடப்பட்டுள்ளது.) நீதிமன்றத்திற்குச் சென்று பதிவாளரை சந்திக்க வேண்டும். அப்போது சத்தியப் பிரமாணம் செய்வதற்காகத் தேவையான ஆவணங்கள் மற்றும் திகதியொன்றை தாங்கள் பெற்றுக் கொள்ளலாம். (இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.)
- தங்களது நியமனத்திற்கான வர்த்தமானப் பத்திரிகையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக தொலைபேசி இலக்கம் 011 -2437509-14 தொடுகை 410 இன் மூலம் சமாதான நீதவான் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். அதற்காக நீதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதத்தின் எட்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம் அவசியமாகிறது. தங்களது நியமனம்

தங்களது கையில் கிடைக்கும்போது நியமனத்திற்கான வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டிருக்கும் என்பதால் அது பற்றி மேற்குறித்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- தங்களது நியமனம் சம்பந்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை வெள்ளிக்கிழமை தினகரன் பத்திரிகையுடன் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், பின்வரும் முகவரியிலிருந்தும் இணையதளத்தின் மூலமும் அரசாங்க அச்சகத்திலிருந்தும் தேவையான வர்த்தமானத் திகதி பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வர்த்தமானப் பத்திரிகையை கொள்வனவு செய்வதற்காக

அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம் ,
163,பொல்ஹேன்கொடை வீதி,
கொழும்பு 05.

## வர்த்தமானப் பத்திரிகையை இணையத்தில் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் இணையத்தளத்தை நாடவேண்டும்:- www.documents.gov.lk

மு.கு.- நீதி அமைச்சின் செயலாளருக்காக கையொப்பமிடப்பட்ட நியமனக் கடிதத்தில் மற்றும் சம்பந்தப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப் பிட்டுள்ள தங்களது பெயர், முகவரி, நீதிமன்ற வலயம் என்பவற்றில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படவேண்டியிருப்பின் சரிப்படுத்தப்பட வேண்டிய விதத்தைத் தெளிவாகக் குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்று மற்றும் நீதி அமைச்சின் செயலாளருக்காக கையொப்பமிட்ட கடிதத்தின் மூலப்பிரதி பதிவுத் தபாலில் தாமதமின்றி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

செயலாளர்,
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,
நீதிமன்ற மாவத்தை,
கொழும்பு 12.



**சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டதன் பின்னர் தங்களது சமாதான நீதவான் பதவி செல்லுபடியாகிறது. பின்னர் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும் :-**

- தாங்கள் சமாதான நீதவான் ஒருவராக கடமையாற்றும் இடத்தில் தங்களது முழுப்பெயர் முகவரி, மற்றும் பதிவு இலக்கத்துடனான அறிவித்தலொன்றை காட்சிக்கு வைக்கவும்.
- தாங்கள் சமாதான நீதவான் ஒருவராக நீதி அமைச்சிலிருந்து நியமனம் பெறுகின்றீர்கள் என்பதுடன், சமாதான நீதவான் சங்கங்களின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வது சமாதான நீதவானாக தங்களது கடமைகளுக்காக அத்தியாவசியமான தல்ல. இத்தகைய சங்கங்களின் செயற்பாட்டைப்பற்றி நீதி அமைச்சு பொறுப்பேற்காது.
- சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் தங்களது கடமைகளை ஆரம்பிக்கலாம்.
- சமாதான நீதவான் இறந்து விட்டால் அது தொடர்பாக நீதி அமைச்சுக்கு அறியத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருத்தல் வேண்டும்.

## 3. உத்தியோகபூர்வ இலச்சினையை தயார் செய்யும் போது

**01. உத்தியோகபூர்வ இலச்சினையை தயார் செய்யும் போது அதில் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் : (அட்டவணை III)**

1. நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பெயர்
2. நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முகவரி
3. நியமனக் கடிதத்தில் 8ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம்

2. அரசாங்கச் சின்னம் ஒருபோதும் தமது உத்தியோகபூர்வ இலச்சினையில் அல்லது கடிதத் தலைப்புகளில் உள்ளடக்குதலாகாது.
3. சமாதான நீதவான் உத்தியோகபூர்வ இலச்சினையில் சமாதான நீதவான் பதிவு இலக்கத்தைத் தவிர வேறு பதிவு இலக்கங்கள் இடுதலாகாது.
4. இதுவரை பதிவு இலக்கமொன்று பெறப்படாதிருப்பின் நியமனக் கடிதத்தினதும் சத்தியப் பிரமாண அல்லது உறுதியுரையின் பிரதிகளை இவ்வமைச்சுக்கு சமர்ப்பித்த பின்னர் பதிவு இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். (2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நியமனம் பெற்ற சமாதான நீதவான்களுக்காக இது செல்லுபடியாகாது.

5. முகவரி மாறுபட்டிருப்பின் பிரதேச செயலாளரால் மேலொப்ப மிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழுடன் அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

**உத்தியோகபூர்வ இலச்சினையை உபயோகிக்கும்போது :-**

- தமது கடமை சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்காக மாத்திரமே உத்தியோக பூர்வ இலச்சினையை உபயோகிக்க வேண்டும்.
- தனிப்பட்ட கடிதங்களுக்காக உத்தியோகபூர்வ இலச்சினை உபயோகித்தலாகாது.
- நீதி அமைச்சுக்கு அனுப்பும் எல்லாக் கடிதங்களிலும் தங்களது உத்தியோக பூர்வ இலச்சினை **கட்டாயமாக** உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

## 4. சமாதான நீதவான் அடையாள அட்டை

தங்களது சமாதான நீதவான் நியமனத்துடன் இணைக்கப்பட்டுள்ள (அட்டவணை 1) சமாதான நீதவான் அடையாள அட்டையை வழங்கும் படிவத்தை நன்கு வாசித்துப் பார்த்து தெளிவான கையெழுத்தில் சரியாகப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

❖ தங்களது சமாதான நீதவான் அடையாள அட்டை காணாமற் போயிருப்பின் புதிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்து நீதி அமைச்சிடம் கோரிக்கையொன்று செய்யப்படுதல் வேண்டும்.

1. சமாதான நீதவான் நியமனக் கடிதத்தின் பிரதியொன்று
2. சத்தியப் பிரமாணத்தின் /உறுதியுரையின் பிரதியொன்று
3. பொலிஸ் முறைப்பாட்டின் பிரதியொன்று
4. 40x40 மி.மீ. வர்ணப் புகைப்படங்கள் இரண்டு
5. தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று
6. ரூபா 200 பின்வரும் கணக்கு இலக்கத்திற்குச் செலுத்தி அதன் ரசீதின் பிரதியொன்று (நீதி அமைச்சின் கணக்குப் பிரிவுக்கும் இச்செலுத்துதலைச் செய்யலாம்.)

**கணக்கு இல : - 176-1-001-9-9025184**



❖ தங்களது சமாதான நீதவான் அடையாள அட்டை பழுதடைந்திருப் பின் அல்லது மீண்டும் வழங்கப்பட வேண்டியிருப்பின்,

1. சமாதான நீதவான் நியமனக் கடிதத்தின் பிரதியொன்று .
2. பழுதடைந்த அடையாள அட்டை
3. 40x40 மி.மீ. வர்ணப் புகைப்படங்கள் இரண்டு.
4. ரூபா 200 பின்வரும் கணக்கு இலக்கத்திற்குச் செலுத்தி அதன் ரசீதின் பிரதியொன்று (நீதி அமைச்சின் கணக்குப் பிரிவுக்கும் இக்கொடுப்பனவைச் செலுத்தலாம்.)

*மு.கு.- 1. தங்களது வதிவிடம் மாறியிருப்பின் பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழின் மூலம் புதிய முகவரியை உறுதிப்படுத்தி எம்மிடம் அனுப்பி வைக்கவும்.*

2. சமாதான நீதவான் பிரிவினால் வழங்கப்படுகின்ற சமாதான நீதவான் அடையாள அட்டையில் எவ்வித மாற்றமும் செய்யப் படுதலாகாது என்பதுடன் அது தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாகும்.

## 5. சமாதான நீதவான் ஒருவரின் பொறுப்புக்கள்

❖ **நீதிமன்ற நியாயாதிக்கத்தைப் பற்றி கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.**

தங்களது நியமனம் தீவு முழுவதுக்குமாயின், தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரியலாம். தங்களது நியமனம் ஏதேனும் ஒரு நீதி நிருவாக வலயத்துக்காக/ மாவட்டத்திற்காக வழங்கப் பட்டிருப்பின், சம்பந்தப்பட்ட நீதி நிருவாக வலயத்தினுள்/ மாவட் டத்தினுள் மாத்திரமே கடமை புரியவேண்டும்.

❖ அரசாங்க இலச்சினையை உபயோகிக்காதிருத்தல்

எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்க சின்னத்தை தமது அலுவலக இலச்சினையில் அல்லது கடிதத் தலைப்புக்களில் அல்லது வேறொரு ஆவணத்தில் உள்ளடக்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

❖ **ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தும்போது ஆட்கள் சமர்ப்பிக்கும் தகவல்களைப் பற்றி கவனம் செலுத்த வேண்டும்.**

நானாவித ஆட்களின் ஆவணங்ளை அத்தாட்சிப்படுத்தும் போது அவர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் பொய்யான வையென உணரும்போது அவ்வாவணங்களை அத்தாட்சிப்படுத்து வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுடன், எச்சந்தர்ப் பத்திலும் சம்பந்தப்பட்ட ஆளின் முன்னிலையிலேயே அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

❖ **கட்டணங்ளை அறவிடுதல்**

தாங்கள் மதிப்புக்குரிய பதவியொன்றை வகிக்கின்றதனால் தமது சேவைக்காக எவ்வித பணத்தையோ அல்லது வேறு ஏதேனு மொரு நன்மையையோ பெற்றுக்கொள்வது முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.

❖ **அலுவலக இலச்சினையை உபயோகித்தல்**

தங்களது எல்லாக் கடமைகளின்போதும் அலுவலக இலச்சினையை உபயோகிக்க வேண்டுமென்பதுடன், பெயர், முகவரி மற்றும் சமாதான நீதவான் பதிவு இலக்கத்தை சரியாகவும் கட்டாயமாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.

❖ **உறவினர்களின் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தல் சம்பந்தமாக**

நெருங்கிய உறவினர்களின் ஆவணங்களை சமாதான நீதவான் அத்தாட்சிப்படுத்தல் செய்தல் முடியாது.

## 6. தனிப்பட்ட நடத்தை

01. I. தனிப்பட்ட முறையில் அனைவருக்கும் முன்மாதிரியாக தாங்கள் இருக்க வேண்டும். எப்போதும் தனது பதவியின் கௌரவத்தைப் பேணும் வகையில் செயல்படுதல் வேண்டும். சேவையை நாடி வருகை தருபவர்களுடன் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளல் வேண்டும்.

II. குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் தண்டனை பெறுவது என்பன சமாதான நீதவான் பதவியை இரத்துச்செய்வதற்குக் காரணமாகின்றன. அதே போல் அரசியல், இனவர்க்க, சாதி, சமய வேறுபாடின்றி அனைவரையும் ஒரே விதத்தில் கவனிக்க வேண்டும்.

(காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட 1895 ஆம் ஆண்டின் சத்தியம் மற்றும் உறுதியுரைக் கட்டளைச்சட்டம், 1953 சத்தியக் கூற்றுச் சட்டம், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை என்பவற்றுக்கு தங்களது கவனம் கோரப்படுகின்றது.)



02. பிரச்சினைக்குரிய சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட எல்லாத் திறத்தவர்களினதும் நம்பிக்கைக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

03. சமுதாய விரோத செயல்களைத் தடுப்பதற்காகவும் குறைத்துக் கொள்வதற்காகவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும்.

04. சட்டத்தை அமுல்படுத்தும் பொலிசு மற்றும் நீதிமன்றங்கள் போன்ற நிறுவனங்களின் தொழிற்பாட்டை இலகுபடுத்து பவராக இருக்க வேண்டும்.

05. தனது சமாதான நீதவான் பதவி நீதி நிருவாக வலயமொன்றுக்கு கிடைத்திருப்பின், நீதி நிருவாக வலயத்திற்கு வெளியே சென்று ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவல்கள் செய்ய முடியாது. ஆயினும் தீவிலுள்ள எந்தவோர் ஆளுக்கும் நீதி நிருவாக வலயத்துக்குள் வருகைதந்து அத்தாட்சிப்படுத்திக் கொள்ள முடியும்.

06. தன்னால் கையொப்பமிடப்படுகின்ற எல்லா ஆவணங்கள் தொடர்பாகவும் குறிப்பு வைத்துக்கொண்ட இடாப்பொன்று தங்களால் பேணப்பட வேண்டுமென்பதுடன், சத்தியக் கூற்று ஒன்றின் மாதிரியொன்று தங்களது வசதிக்காகவும் தகவலுக்காகவும் இதில் அட்டணைப்படுத்தப்பட்டுள்ளது.

சமாதான நீதவான் ஒருவராக தங்களுக்கு எழுகின்ற சிக்கல் களின்போது ,

செயலாளர் ,<br>
நீதி அமைச்சு,<br>
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,<br>
கொழும்பு 12,

என்னும் முகவரியுடனும்,

☎ 011- 2437507 முதல் 12 வரை ,தொடுகை: சமாதான நீதவான் பிரிவு 410 ஆம் இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

**இலங்கையினுள் சட்டம், சமாதானம் மற்றும் சமுதாய நலன்புரியை கட்டியெழுப்புவதில் தங்களின் சேவையை நாங்கள் மிகவும் வரவேற்கின்றோம்.**

[redacted]

## 7. அட்டவணைகள்

**அட்டவணை I**

சமாதான நீதவான் பிரிவு, எனது இல: 20/1/அடையாளஅட்டை
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.
20.... ஆம் திகதி.

ஐயா/அம்மணி,

**சமாதான நீதவான் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் விண்ணப்பம்**

தனது நியமனத்தில் சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க வேண்டும். (சமாதான நீதவான் நியமனம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு 06 மாத காலத்துக்குள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வது கட்டாயமானது.)

02. தங்களது சமாதான நீதவான் நியமனத்திற்கான அடையாள அட்டையை வழங்குவதற்காக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் மேற் குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இவ்வமைச்சுக்கு வருகை தந்து கையளிக்கலாம் எனத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

01. அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடனான நியமனக் கடிதத்தின் நிழற்படப் பிரதியொன்று. (மாண்புமிகு அமைச்சரின் கையொப்பத்துடனான மேவுகை கடிதம் அல்ல)

02. 06 மாத காலத்துக்குள் பெறப்பட்ட 40X40 மி.மீ அளவிலான 02 வர்ணப் புகைப்படங்கள் (இப்புகைப் படங்களின் மறுபக்கத்தில் தங்களது பெயர் மற்றும் நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தங்களது சமாதான நீதவான் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.)

03. மக்கள் வங்கி, நகர மத்திய கிளை, கொழும்பு 10, 176-1-001-9-9025184 ஆம் இலக்க 'நீதி அமைச்சின் செயலாளர்' பெயரில் உள்ள கணக்கில் 200 ரூபாவை வரவு வைத்து அதன் பற்றுச்சீட்டை இத்துடன் இணைக்க வேண்டும். (மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.) காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).



- இச் செலுத்துதல்களை இவ்வமைச்சின் கணக்குப் பிரிவிலும் செலுத்தலாம்.

04. சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற உறுதியுரையின் பிரதியொன்று .

05. தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்று .

மு.கு .
- மேற்கூறியவை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'சமாதான நீதவான் அடையாள அட்டைகள்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
- மேற்குறித்த அவசியமான ஆவணங்கள் உள்ளடங்காத மற்றும் உரிய முறையில் தெளிவாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களைப் பற்றி நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படலாம்.
- முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தயோகத்தரின் சான்றிதழைச் சமர்ப்பிக்கவும்.

இப்படிக்கு, விசுவாசமுள்ள,

..........................................................

நீதி அமைச்சின் செயலாளருக்காக

(இங்கே வெட்டவும்)

..........................................................................................

**சமாதான நீதவான் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் :- ..................................................
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..................................................
3. முகவரி :- ..................................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ..................................................
5. சமாதான நீதவான் பதிவு இலக்கம் :- ..................................................
(நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியின்படி)

திகதி : ...............

..........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

அட்டவணை II

## சத்தியக்கூற்று ஒன்றின் மாதிரி
## சத்தியக்கூற்று

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், பிலியந்தலை, மொரட்டுவ வீதி, 142/6 ஆம் இலக்க முகவரியைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி ஆகிய நான், இந்து மதத்தைச் சேர்ந்தவராக நேர்மையாகவும், உண்மையாகவும், பய பக்தியுடனும் உறுதியுரை அளித்து பின்வருமாறு வெளிப்படுத்துகிறேன் :-

1. இச்சத்தியக்கூற்றில்/உறுதியுரையில் பெயர் குறிப்பிட்டுள்ள சத்தியம் /உறுதியுரை அளிப்பவர் நானாவேன்.
2. எனது தேசிய அடையாள அட்டையின் இலக்கம் 372667550 v ஆகும்.
3. எனது மகனாகிய கந்தசாமி செல்வநாயகம் என்பவரால் எனது பெயரில் அற்றோனித் தத்துவப்பத்திரமொன்று 2005, யூலை மாதம் 23 ஆந் திகதி பிலியந்தலையில் வைத்து கைச்சாத்திடப்பட்டதுடன் அந்த தத்துவப் பத்திரத்தின் இலக்கம் 266 ஆகும்.
4. அத்தத்துவப்பத்திரம் 2007, ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. சொல்லப்பட்ட 266 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் இதுவரை செல்லுபடியாக உள்ளதுடன், ஒருபோதும் அது இரத்துச் செய்யப்படவில்லை.

(சத்தியம்/உறுதியுரை அளிப்பவர் 50 ரூபா முத்திரையொன்றின் மேல் கையொப்பமிடுவது கட்டாயமாகும் .) } ...................................... உறுதியுரை அளிப்பவர்

மேற்கூறிய கூற்றை வாசித்து விளங்கப் படுத்தப்பட்டு அவர் விளங்கிக்கொண்டதாக திருப்தியடைந்து 2007, செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி கொழும்பில் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் . } ...................................... சமாதான நீதவான் (அலுவலக இலச்சினை)

சத்தியக் கூற்றுக்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடலாம் .



அட்டவணை III

## சரியான உத்தியோகபூர்வ இலச்சினையொன்றின் மாதிரி

தங்களது நியமனக் கடிதத்தின் பெயர் கணபதிப்பிள்ளை ஆறுமுகம் சோமசுந்தரம் எனக் குறிப்பிட்டிருப்பின் ,

கே.ஏ.சோமசுந்தரம் அல்லது கே. ஆறுமுகம் சோமசுந்தரம் என உத்தியோகபூர்வ இலச்சினையில் குறிப்பிடுதல் வேண்டும்.

தங்களது முகவரி – நியமனக் கடிதத்தில் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரி இல 10, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு 06 என்பதாயின், மற்றும் தங்களது பதிவு இலக்கம் – நியமனக் கடிதத்தின் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பதிவு இலக்கம் 10/07/மேமா/தீமு/23 என்பதாயின்

| கே.ஏ.சோமசுந்தரம்,<br>சமாதான நீதவான்,<br>இல. 10, இரண்டாம் குறுக்குத்தெரு,<br>கொழும்பு 06. | K. A. Somasundaram,<br>Justice of the Peace,<br>No. 10, Second Cross<br>Street, Colombo 06. |
|---|---|
| 10/07/மேமா/தீமு/23 | 10/07/WP/WI/23 |

பின்னிணைப்பு I

**பதவி வழியில் நியமிக்கப்படுகின்ற இலங்கையின் சமாதான நீதவான்கள்**

- இலங்கைக் குடியரசின் சனாதிபதி
- பாராளுமன்றத்தின் சபாநாயகர்
- அரசாங்கத்தின் அமைச்சர்கள்
- பிரதம நீதியரசர்
- எதிர்கட்சித் தலைவர்
- உயர்நீதிமன்ற நீதிபதி
- மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர்
- மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்
- பிரதி சபாநாயகர்
- ஆளும் கட்சியின் பிரதான ஒழுங்கமைப்பாளர்
- பிரதி அமைச்சர்கள்
- பிரதி குழுத் தலைவர்கள்
- பாராளுமன்ற உறுப்பினர்கள்
- சட்டமா அதிபர்
- அமைச்சரவையின் செயலாளர்
- சனாதிபதியின் செயலாளர்
- பிரதமரின் செயலாளர்
- பாராளுமன்றப் பொதுச்செயலாளர்
- அமைச்சுக்களின் செயலாளர்கள்
- மேல்நீதிமன்ற நீதிபதிகள்
- பொலிஸ்மா அதிபர்
- பிரதிசொலிஸிட்டர் ஜெனரல்
- அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள்
- சட்ட வரைஞர்
- இலஞ்ச ஆணையாளர்



- மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல்
- மேலதிக சட்ட வரைஞர்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்
- பதிவாளர் தலைமையதிபதி
- துணை சொலிஸிட்டர் ஜெனரல்கள்
- அமைச்சுக்களின் சிரேட்ட உதவிச் செயலாளர்கள்
- பாராளுமன்றத்தின் பிரதிப்பொதுச் செயலாளர்
- உயர்நீதிமன்றப் பதிவாளர்
- மேன் முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர்
- பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள்
- சிரேட்ட அரசாங்க சொலிஸிட்டர் ஜெனரல்கள்
- அரசாங்க சட்டத்தரணிகள் மற்றும் அமைச்சுக்களின் உதவிச் செயலாளர்கள்
- உயர்நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்
- மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்
- பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பயிலுநர் உதவிப்பொலிஸ் அத்தியட் சகர்கள் அல்லாத உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள்
- மேல் நீதிமன்றப் பதிவாளர்
- பாராளுமன்றச் சபாநாயகரின் செயலாளர்
- பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் செயலாளர்
- தொழில் நியாய சபைகளின் செயலாளர்

## பதவி வழியில் இலங்கையின் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்கள்

- மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதிகள்
- ஒவ்வொரு குடும்ப நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்
- நீதிவான்கள்
- ஒவ்வொரு ஆரம்ப நீதிமன்றத்தினதும் நீதிபதிகள்
- ஒவ்வொரு தொழில் நியாய சபையினதும் தலைவர்கள் ஆகியோர் தமது நீதிமன்ற நியாயாதிக்கத்தை எந்த பிரதேசத்தினுள் அமுல் படுத்துகின்றார்களோ, அப் பிரதேசத்திற்காகவும், மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் செயலாற்றுகின்ற காதிமார்கள் அந்த மாவட்டங் களுக்காகவும் சமாதான நீதவான்களாக செயல்படுகின்றனர்.
- மேலும் மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கங்களில் வதியும் காதிச் சபைகளின் உறுப்பினர்கள் அவர்கள் வதியும் அந்த மாவட்டங் களுக்காகவும்
- மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்கங்களில் வதியும் காதிச் சபைகளின் உறுப்பினர்கள் அவர்கள் வதியும் அந்த மாவட்டங்களுக்காகவும்
- ஏதேனுமொரு வலயத்தில் நடாத்தப்படுகின்ற மேல்நீதிமன்றத்தின் மேலதிக பதிவாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின், அந்தந்த வலயம் உள்ளடங்கிய, மாவட்ட நீதிமன்றங்களின், குடும்ப நீதி மன்றங்களின் பதிவாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் உதவிச் செயலாளர்கள் அந்தந்த நீதிமன்றங்களின் அல்லது தொழில் நியாய சபைகளின் நியாயாதிக்கத்திற்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் தாங்கள் சேவை செய்யும் அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் மேலதிக செயலாளர்கள் தாங்கள் சேவை செய்யும் அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்காகவும்,
- நிருவாக மாவட்டங்களின் செயலாளர்களின் நிருவாக அலுவலர்கள் அந்தந்த மாவட்டச் செயலாளர்களின் மாவட்டங்களுக்காகவும்,
- பிரதேச செயலாளர்கள் தங்களது அந்தந்த நியாயாதிக்கங்களுக் காகவும்,
- 1991 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நீதித்துறைச் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் மாகாண சபை எல்லா உறுப்பினர்களுக்கும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்காகவும், மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் உதவியாளர்கள் தமது நியாயாதிக்கங்களுக்காகவும் பதவிவழியில் சமாதான நீதவான்களாக செயல்படுகின்றனர்.

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் 1(அ) உபபிரிவின்படி நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் பதவி நிலையில் நியமனம் பெறும் சமாதான நீதவான்கள்



## பதவி நிலையில் நியமனம் பெறும் இலங்கையின் சமாதான நீதவான்கள்

- உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமையதிபதி
- உள்நாட்டு இறைவரி ஆணையாளர்கள்
- பிரதி பதிவாளர் தலைமையதிபதிகள்
- உதவி பதிவாளர் தலைமையதிபதிகள்
- பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிருவாக அலுவலர்

## பதவி நிலையில் நியமனம் பெறும் இலங்கையின் பகுதிகளுக்கான சமாதான நீதவான்கள்

- காணிப் பதிவாளர்கள்
- மேலதிக மாவட்ட பதிவாளர்கள்
- பிறப்பு இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்கள்
- முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள்

} அவர்களின் நியமனங்கள் ஏற்புடையதாகும் பிரதேசங்களுக்காக

- கிராம உத்தியோகத்தர்கள்